

முதலமைச்சர் அவர்களின் வாகன ஓட்டுநர் பாஸ்கரின் தந்தையும், சென்னை தேனாம்பேட்டை பகுதியின் கழக மூத்த முன்னோடியுமான துரை அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவெய்தினார், அன்னாரது உடலுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2024) மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக திருச்சி, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**23/11/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 05:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | ரத்னா காம்ப்ளக்ஸ், ஆஸ்பத்திரி சாலை, துறையூர். |
| மாலை 05:45 மணி | பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா. | திருச்சி சாலை, துறையூர். |
| மாலை 06:00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா. | பேருந்து நிலையம், துறையூர். |

**24/11/2024 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் குரோம்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற மக்களவை குழு தலைவருமான டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு 2026 தேர்தல் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து சிறப்புரையாற்றினர். அப்பொழுது தாம்பரம் மாநகர செயலாளர் – தாம்பரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னாண்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, கோல்ட்டி.பிரகாஷ், அ.தமிழ்மாறன், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. - அ.ம.துரை வீரமணி முன்னிலை! வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்-

# அயப்பாக்கத்தில் மாபெரும் மருத்துவ முகாம் - சமுதாய வளைகாப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்! டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்பு!

சென்னை, நவ. 23-

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சியில் மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் சமுதாய வளைகாப்பு விழா இன்று (23.11.2024 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு, TNHB பேரறிஞர் அண்ணா எழில்மிகு பசுமை பூங்காவில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி, தலைவர் - செயல் அலுவலர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட ஆட்சியர் மருத்துவர் த.பிரபு சங்கர் தலைமை வகிக்கிறார். மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பா.பிரியா ராஜ் வரவேற்பு ஆற்றுகிறார்.

மருத்துவ முகாமை சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள் சுப்ரியா சாஹு, டி.எஸ்.செல்வவிநாயகம், ஆ.ராஜ்குமார், ஐமல் ஐமால், பா.ஜெயகுமார், எஸ்.செல்வராணி, எஸ்.பானுமதி, ஆர்.ஞானசௌந்தர் மற்றும் லயன் எஸ்.தனசேகரன், லயன் டி.ஆர்.நந்தகுமார், ஒன்றியக்குழுத் தலைவர் பா.கிரிஜா, ஒன்றியக்குழு துணைத் தலைவர் ஜெ. ஞானபிரகாசம், மாவட்டக்குழு உறுப்பினர் சு.சக்திவேல், துணைத் தலைவர் ஏ.எம்.யுவராஜா, ஒன்றியக் குழு உறுப்பினர் இரா. வினோத், வார்டு உறுப்பினர்கள் வி.அந்தோணி தியாகராஜன், ஒய்.லீமா, வி.கவிதா, ஏ.செல்வகுமார், கே.உமா, கே.எஸ்.மாறன்குமார், கே.உமா மகேஸ்வரி, பி.பாபு, பி.கரன்சிங், டி.பத்மாவதி, வி.திலகவதி, ஜி.சண்முகம், எஸ்.ஹேமலதா, ஏ.பிரபாவதி மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு மற்றும் லயன்ஸ் கிளப் ஆப் அயப்பாக்கம் செய்கிறது.

மருத்துவர் ஜி.எஸ். ராஜேஷ் நன்றி கூறுகிறார்.

# தஞ்சை கூத்தரசனின் 79 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா!

## அவரது இல்லத்தில் நாளை எளிமையாக நடைபெறுகிறது!

சென்னை, நவ. 23 -

தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் நா.சந்திரபாபு தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. முன்னணிப் பேச்சாளரும், தலைமை இலக்கிய அணியின் துணைச் செயலாளராய், அணிச் செயலாளராய் நாற்பதாண்டு காலம் பொறுப்பு வகித்து கடந்த மூன்றாண்டு காலம் புரவலர் பொறுப்பில் இருந்து வருபவருமான தஞ்சை கூத்தரசனின் 79 ஆண்டு பிறந்த நாள் (24.11.2024) விழாவும் அவருடைய துணைவியார் திருமதி. இந்துமதிக்கு 74ஆவது ஆண்டு பிறந்த நாள் (24.11.2024) விழாவும் ஒரு சேர வருகிறது.

இவர்கள் இருவரின் பிறந்த நாள் விழா, சென்னை - 14, இராயப்பேட்டை, 50/52, முத்து முதலிதெரு (ஜி.3, டாக்டர், விசுவேசுவர் அபார்ட்மென்ட்ஸ்) எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை எளிமையாக நடை பெறுகிறது.

1966 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணாவின் அடியொற்றி கழகத்தின் பேச்சாளராய் தமிழ்நாடு முழுவதும் பேசியும் மும்பை, பெங்களூர், கோலார் தங்கவயல் ஆகிய பிற மாநிலங்களில் சொற்பொழிவாற்றியும் வந்துள்ள தஞ்சை. கூத்தரசன் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சிறப்புக்குரியவர்.

79 ஆவது ஆண்டு பிறந்த நாள் காணும் இவர் கழகத்தினரின் அழைப்பை ஏற்று கழக நிகழ்ச்சிகளில் இப்போதும் பேசி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர், தமிழக முதல்வர் தளபதி ஆகியோரின் தலைமையை ஏற்று பணி புரிந்து வரும் தஞ்சை. கூத்தரசன் தம்பதியரை நாம் அனைவரும் வாழ்த்திடுவோம். (தஞ்சை. கூத்தரசனின் தொலைபேசி எண்கள்: 044-28350894, 90030 90686, 94441 77737)

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் - சென்னை மேற்கு மாவட்ட

# அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் வேண்டுகோள்!

சென்னை, நவ.23-

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (23.11.2024, சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெரு, மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில துணை செயலாளர் எஸ். ராம்குமார் முன்னிலையில், சென்னை மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராகிய நான் (சி.கே.ரெங்கராஜ்) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

எனவே இக்கூட்டத்தில் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக ஆக்கப்பணிகள்.





சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 36வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து பாகத்திலும் புதிய வாக்காளர் சேர்ப்பு மற்றும் சரிபார்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பகுதிக் கழக செயலாளர் க.ஜெயராமன் தொகுதி தேர்தல் பார்வையாளர் கன்னிகை ஜி ஸ்டாலின் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர் கமலக்கண்ணன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ. ஆர்.ஆர். மலைச்சாமி எம்.சி., க.பாபு, கழக நிர்வாகிகள் பாக நிலை முகவர்கள் (பிஎல்ஏ2) கலந்து கொண்டனர்.